# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

## அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2025

# தமிழ்

# ஆண்டு 5

நேரம்: 120 மணித்துளிகள்

நாள்: 07.06.2025

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 12

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

## பகுதி 1 - எழுதுதல்

### 1 மிகப்பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடி இடுக.

1. தமிழரது தோற்கருவிகளுள் ஒன்று
   - ☐ யாழ்
   - ☐ பறை
   - ☐ குழல்

2. வையகம் என்பதன் ஒத்தபொருட் சொல்
   - ☐ உலகம்
   - ☐ காடு
   - ☐ வானம்

3. முக்கனிகளுள் ஒன்று
   - ☐ திராட்சை
   - ☐ வாழை
   - ☐ மாதுளை

4. தேனீ என்பதன் பன்மை
   - ☐ தேனீ
   - ☐ தேனீக்கள்
   - ☐ தேன்கள்

5. காடுபடு செல்வங்களுள் ஒன்று
   - ☐ தேன்
   - ☐ பால்
   - ☐ தயிர்

6. போறன் என்பதன் எழுத்து வடிவம்
   - ☐ போவன்
   - ☐ போவோம்
   - ☐ போகிறேன்

7. தேசியக்கவி எனப் போற்றப்பட்டவர்
   - ☐ பாரதிதாசன்
   - ☐ பாரதியார்
   - ☐ ஔவையார்

8. குருவிக்கு குஞ்சு போல கிளிக்கு
   - ☐ பிள்ளை
   - ☐ கன்று
   - ☐ குட்டி

9. கடுகு சிறிதானாலும் காரம் பெரிது என்பது
   - ☐ பழமொழி
   - ☐ தனிமொழி
   - ☐ பொதுமொழி

10. இளவரசுப் பட்டத்தைத் துறந்து துறவு வாழ்க்கையை வாழ்ந்தவர்
    - ☐ பாவேந்தர்
    - ☐ இளங்கோவடிகள்
    - ☐ விபுலாநந்த அடிகள்

11. வண்ணப் பூக்கள் தோட்டத்தில் மலர்ந்திருந்தன. இதில் வந்துள்ள எழுவாய்

☐ எங்கும் ☐ பூக்கள் ☐ மலர்ந்தன

12. இயல், இசை, நாடகம் என்பவை

☐ முத்தமிழ் ☐ பைந்தமிழ் ☐ செந்தமிழ்

13. முத்துக்கு குவியல் போல தென்னைக்கு

☐ கூட்டம் ☐ தோப்பு ☐ சோலை

14. முற்காலத்தில் மாதோட்டம் என அழைக்கப்பட்ட இடம்

☐ மன்னார் ☐ கிளிநொச்சி ☐ முல்லைத்தீவு

15. முன்னிலைப் பெயர்

☐ நாங்கள் ☐ நீங்கள் ☐ அவர்கள்

16. ஓடுங்கள் என்பதன் எதிர்மறை

☐ ஓடாதீர்கள் ☐ ஓடினார்கள் ☐ ஓடுவார்கள்

17. தட்டிக்கொடுத்தல் என்ற மரபுத்தொடர் குறிப்பது

☐ ஊக்கமளித்தல் ☐ உதவ மறுத்தல் ☐ உதவுதல்

18. நெற்பயிர்கள் முற்றிப் பயன்தரும் காலம்

☐ தைத்திங்கள் ☐ மாசித்திங்கள் ☐ பங்குனித்திங்கள்

19. அப்பாவின் அப்பா எனக்கு

☐ பெரியப்பா ☐ மாமா ☐ அப்பப்பா

20. தமிழினிமை என்பதைப் பிரித்து எழுதினால்

☐ தமிழி + இனிமை ☐ தமிழ் + இனிமை ☐ தமிழின் + இனிமை

20x1 = 20 புள்ளிகள்

## 2 தரப்பட்டுள்ள வினையடியைக் கொண்டு நிரற்கூட்டை நிரப்புக.

| | வினையடி | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|---|
| 1. | பாடு | | | |
| 2. | சிரி | | சிரிக்கிறான் | |
| 3. | மடி | | | மடிப்பாள் |
| 4. | செய் | | | |

10x1 = 10 புள்ளிகள்

## 3 பொருத்தமான முடிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

ஆடினாள் | பறந்தன | சென்றடைந்தேன் | செல்கிறது | அமைந்துள்ளது

1. மன்னார் ஈழத்தின் வடமேற்கில் ____________________.
2. நான் உணவகத்தைச் ____________________.
3. மலைப்பாதை வளைந்து வளைந்து ____________________.
4. வாணி மேடையில் நடனம் ____________________.
5. பறவைகள் உயரமாகப் ____________________.

5x2 = 10 புள்ளிகள்

## 4 தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

### ஐக்கிய இராச்சியம் - கனடா

1. Song
2. Fish
3. Bird
4. Birthday
5. House

### பிரான்சு

1. La chanson
2. Le poisson
3. L'oiseau
4. L'anniversaire
5. La maison

### நோர்வே

1. Sang
2. Fisk
3. Fugl
4. Bursdag
5. Hus

### இத்தாலி

1. Canzone
2. Pesce
3. Uccello
4. Compleanno
5. Casa

### நெதர்லாந்து

1. Lied
2. Vis
3. Vogel
4. Verjaardag
5. Huis

### டென்மார்க்

1. Sang
2. Fisk
3. Fugl
4. Fødselsdag
5. Hus

### சுவீடன்

1. Sång
2. Fisk
3. Fågel
4. Födelsedag
5. Hus

### பின்லாந்து

1. Laulu
2. Kala
3. Lintu
4. Syntymäpäivä
5. Koti

### தமிழ்

1.
2.
3.
4.
5.

5x2 = 10 புள்ளிகள்

## 5 அடைப்புக்குறிக்குள் இருக்கும் சொற்களைப் பொருத்தமாக மாற்றி எழுதுக.

1. மாமா ____________________ வாசிக்கிறார். (செய்தித்தாள்)

2. தைப்பொங்கல் ____________________ கொண்டாடப்படுகிறது. (தமிழர்)

3. ஆருதி ____________________ச் சென்றாள். (பள்ளி)

4. ____________________ பேச்சு சிறப்பாக இருந்தது. (மலரவன்)

5. குருவி ____________________ பறந்தது. (கூடு)

5x2 = 10 புள்ளிகள்

## 6 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. ஒலிம்பிக் வளையங்கள் எவற்றைக் குறிக்கின்றன?

____________________________________________

2. மன்னாரில் ஓடும் ஆறு எது?

____________________________________________

3. தமிழ்மொழியில் உள்ள அறநூல்களுள் இரண்டை எழுதுக.

____________________ ____________________

4. ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

உயர்திணை: ____________________ அஃறிணை: ____________________

5. இணைமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

____________________________________________

____________________________________________

5 x2 = 10 புள்ளிகள்

## 7 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவு செய்து 50 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. பாரதியார்
2. மன்னார்
3. நான் விரும்பும் விளையாட்டு

உள்ளடக்கக் குறிப்புகள்

- விளையாட்டுப் பொருள்கள்
- விளையாடும் நேரம்
- விரும்பும் காரணம்

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

**“நீரின்றி அமையாது உலகு” என்ற குறள் மூலம் வள்ளுவர் நீரின் தேவையைக் கூறியுள்ளார். நீர் இயற்கை வளங்களுள் ஒன்று. இது நிறம், மணம் இல்லாதது. நீரானது மரங்கள், விலங்குகள் என அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு உதவுகிறது. ஏரி, குளம், கடல் போன்ற அனைத்தும் நீரால் நிரப்பப்பட்டுள்ளன. நீர் ஆவியாகிப் பின் மழையாகப் பெய்கிறது. எங்கள் முன்னோர் பல வழிகளில் மழை நீரைச் சேமித்து வைத்தனர். சேமித்த நீரைப் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தினர். தாயகத்தில் உள்ள வீடுகளில் பெரும்பாலும் கிணற்றில் இருந்தே நீரைப் பெறுவர்.**

1. நீரின் தேவை பற்றி வள்ளுவர் கூறியது யாது?

___________________________________________

___________________________________________

2. நீரால் நிரப்பப்பட்டுள்ளவை எவை?

___________________________________________

___________________________________________

3. எங்கள் முன்னோர் சேமித்த நீரை எதற்குப் பயன்படுத்தினர்?

___________________________________________

___________________________________________

4. மழை எவ்வாறு பெய்கிறது?

___________________________________________

___________________________________________

5. தாயகத்தில் உள்ள வீடுகளில் எதிலிருந்து நீரைப் பெறுவர்?

___________________________________________

___________________________________________

5x2 = 10 **புள்ளிகள்**

**௨. தரப்பட்டுள்ள அறிவித்தலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளம் இடுக.**

## ஓவியக் கண்காட்சி

ஓவியக் கண்காட்சியில் மாணவரது ஓவியங்கள் காட்சிக்கு வைக்கப்படும். வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். கண்காட்சியின்போது சிற்றுண்டிச்சாலையில் உணவுகளும் விற்கப்படும்.

இடம்: பாரதி கலையரங்கு
காலம்: 14.06.2025 சனிக்கிழமை
நேரம்: முற்பகல் 09:00 மணி

1. இது மாணவர்களுக்கான ஓவியக் கண்காட்சி. ( )

2. ஓவியக் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். ( )

3. ஓவியக் கண்காட்சி தமிழ்ப்பள்ளியில் நடைபெறும். ( )

4. வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். ( )

5. சிற்றுண்டிச்சாலையில் உணவு விற்கப்படும். ( )

5x1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |